# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



(161)

அனுப்புநர்
திரு. இரா. வாழவந்தான், பி.இ.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம்,
6. சன்னதி தெரு, சுப்ரமணியநகர்,
சூரமங்கலம். சேலம் – 636 005.
தொலைபேசி எண்: 0427–2448625
email id ddslmregion@gmail.com

பெறுநர்
செயல் அலுவலர்,
ருத்ராவதி பேரூராட்சி,
தாராபுரம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்.

ந.க.எண்.246/2017 சேம–3 நாள்.24.09.2018

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் – சேலம் மண்டலம் – திருப்பூர் மாவட்டம் – தாராபுரம் வட்டம் – ருத்ராவதி பேரூராட்சி – குண்டடம் கிராமம் – ரீ.ச.எண். 1213/1சி2–ல் 3.18 ஏக்கர் பரப்பில் மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் – ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. செயல் அலுவலர், ருத்ராவதி பேரூராட்சி, திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க. எண். 25/2017, நாள். 25.01.2017, 08.03.2018 மற்றும் 05.09.2018.
2. மனுதாரர் திரு. சா. சத்தியசீலன், திருப்பூர் அவர்களின் விண்ணப்பம் நாள் 23.01.2017 மற்றும் 24.09.2018.
3. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 25.04.2018 மற்றும் 19.09.2018.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 8712/2017/எல்ஏ2, நாள். 13.06.2017 மற்றும் 13.07.2017.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண். 14619/88/பிசிசி, நாள். 27.04.2014.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண். 40483/00/எல்ஏ1, நாள். 07.11.2002.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண்.7978/2012/எல்ஏ2, நாள். 19.04.2012.
8. அரசு ஆணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017.
9. இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, திருப்பூர் அவர்களின் கடித எண். இ2/5894/2017, நாள். 12.07.2017.
10. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12201/2017/Spl.Cell, நாள். 28.09.2017.

-------

**ஆணை:**

பார்வை 1–ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம். ருத்ராவதி பேரூராட்சி, குண்டடம் கிராமம், ரீ.ச.எண். 1213/1சி2–ல் 3.18 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான உத்தேசங்கள் பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3–ல் சுட்டிய 25.04.2018 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு, பார்வை 1–ல் சுட்டிய கடிதம் நாள். 05.09.2018–ன் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானபத்திரம் எண். 5546/2018, நாள்.24.08.2018

பெறப்பட்டதைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
சேலம் மண்டலம், சேலம்.

24/04/18

இணைப்பு
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு
நிபந்தனைகள் (2 நகல்கள்)

நகல்
திரு சா. சத்தியசீலன்,
த/பெ. கே. எம். சாமிநாதன்,
11, கோவை ரோடு,
குண்டடம்,
தாராபுரம் வட்டம், திருப்பூர்.
} பத்தி ஒன்று மட்டும்.

(171)

## ருத்ராவதி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை: திரு.வே.முருகன்

ந. க. எண்.25/2017 நாள். 06.03.2019

பொருள் : மனைப்பிரிவு – திருப்பூர் மாவட்டம் – ருத்ராவதி பேரூராட்சி – குண்டடம் கிராமம் ரீ.ச.எண்.1213/1சி2-ல் 3.18 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப அனுமதி – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் - வழங்கப்பட்டது மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. திரு.சா.சத்தியசீலன், திருப்பூர் அவர்களின் விண்ணப்பம் நாள்.23.01.2017.
2. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.25/2017 நாள்.25.01.2017, 08.03.2018
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.246/2017சே.ம-3 நாள்.19.09.2018.
4. ருத்ராவதி பேரூராசி மன்ற தீர்மானம் எண்.94/2018 நாள்.29.08.2018.
5. உதவிப்பொறியாளர் (தொ) கொளத்துப்பாளையம் பேரூராட்சி (தலைமையிடம்) திருப்பூர் மாவட்டம் அவர்களின் சான்று நாள்.03.09.2018
6. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.25/2017 நாள்.05.09.2018.
7. நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு அங்கீகாரம் ம.வ/ம(சே) எண்.883/2018 நாள்.24.09.2018.
8. ருத்ராவதி பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.20/2019 நாள்.15.02.2019.
9. தொடர்புடைய ஆவணங்கள்

******

**உத்திரவு :**

திருப்பூர் மாவட்டம், ருத்ராவதி பேரூராட்சி பகுதிக்குட்பட்ட குண்டடம் கிராமம் கிராமம் ரீ.ச.எண்.1213/1சி2-ல் 3.18 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு பார்வை 7-ல் காண் நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் சேலம் மண்டலம், சேலம் அவர்களால் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அனுமதியை தொடர்ந்து பின்வரும் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகள் தெரிவிக்கசப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ./ம.(சே) எண்.883/2018 என எண்ணிடப்பட்டு வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும் மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சம்மந்தப்பட்ட மாநகராட்சி சட்ட விதிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 175,179

மற்றும் 300 (8) பிரிவு, தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1997, விதி 3 (1)
மற்றும் அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி துறை, நாள்.16.06.2003-ன் கீழ்
ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேறப சரளைக கற்களைக் கொண்டு மனுதாரரால்,
நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும்
அகலத்திற்கும் மனுதாரரால் அமைககப்பட வேண்டும்.

2. அத்தோடு தேவையான பாலங்கள் சாக்கடை வடிகால், துப்புரவு வசதி,
தெருவிளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கொப்ப மனுதாரர்
அமைத்துத் தர வேண்டும்.

3. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக
மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள் பொது ஒதுக்கீடு
அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மறறும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல்
ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன்
ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவல் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை
மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/உரிமையாளர் முறையாக அமைக்கப்பட்டு செயல்
அலுவலர், ருத்ராவதி பேரூராட்சி அவர்களால் உரிய படிவத்தில் பதிவு செய்து
பொதுச் சாலையாக பராமரிக்க ஒப்படைக்கப்பட்டுள்ளது.

5. மேற்படி சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை
செய்வதற்கான உட்பிரிவு தொகையையும் செயல் அலுவலர், ருத்ராவதி பேரூராட்சி
அவர்களுக்குச் செலுத்துதல் வேண்டும். இதை நடைமுறைப்படுத்த
மனுதாரரிடமிருந்து சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத்
தொகையைப் பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெற
வேண்டும்.

6 ஒரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள்
அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (splay) அமைக்கப்பட
வேண்டும்.

7 மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு
மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம்
செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

8 அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.

9 அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு/ வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் (23 அடி) அகல சாலைக்கு 1.5 மீட்டரும் (5'அடியும்) 9 மீட்டர் (30 அடி) அகலம் மற்றும் 12 மீட்டருக்கு (40அடிக்கு) அகலம் வரையிலான சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும்), 18 மீட்டர் (60 அடி) சாலைக்கு 4.5 மீட்டருக்கு (15அடியும்), 24 மீட்டர் (80 அடி) அகலமும் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர். (20 அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப் பகுதியில் தெருவின் உயர்மட்டத்திலிருந்து 1.8மீ (6அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின்படி 2.4 மீ (8அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ, சுவரோ கட்டுதல் கூடாது.

10 மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீ அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறவெளி விடப்பட வேண்டும் 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.

11 ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டித்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மற்றும் ஊராட்சி பகுதிக்கு 2 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்கத் திறந்தவெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்து வண்டி நிறுத்தும் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச்சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம், ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும், மனையின் பின்புற நில மட்டத்திலிருந்து 3.00 மீட்டர்/ 3.75. மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

12 மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

13 கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன் படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி பள்ளங்கள், குழிகள், ஏற்படுத்தலோ கூடாது.

14.

15 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

16 மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய செயல் அலுவலர், ருத்ராவதி பேரூராட்சி அவர்களால் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டித்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

17 மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

18 பூங்காவுக்காக, ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் உள்ளாட்சி அங்கீகாரம் வழங்கும் முன் தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நிலங்களை மனைபிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

19 மனையின் ஊடே குறைந்த அழுத்த/ உயர் அழுத்த கம்பிப் பாதை/ தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்

20 மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக செயல் அலுவலர், ருத்ராவதி பேரூராட்சி அவர்களால் (Executive Authority)யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

21 (அ) மேற்படி மனைப்பிரிவிற்கு நகர ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப ஒப்புதல் (Techinical Approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(ஆ) தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச்சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால், மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(இ) மனைப்பிரிவு இடம் 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 (1) -ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக செயல் அலுவலர்(Executive authority) மன நிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவுக்கு ஒப்புதலளித்து அங்கீகாரம் வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(ஈ) மேற்படி மனைப்பிரிவுக்கு பேரூராட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் செயல் அலுவலர், ருத்ராவதி பேரூராட்சி அவர்களால் ஒப்படைத்தற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

(உ) மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதிப் பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதையும் மனநிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவுக்கு பேரூராட்சி செயல் அலுவலர் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

22 மனுதாரர் செயல் அலுவலர், ருத்ராவதி பேரூராட்சி அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

23 மனுதாரர் சமாப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியானதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

24 நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களால் இரத்து செய்யப்படும்.

181

25 விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

26 தணிக்கையின் போது ஏதேனும். ஆட்சேபனைகள் எழுப்பட்டு அதற்கு ஏதேனும் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் அக்கட்டணத்தையும் மனைப்பிரிவு உரிமையாளரே செலுத்த வேண்டும். வரிசை எண் 1 முதல் 24 முடிய. நகர் ஊரமைப்புத் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் எவ்விதமான குறைபாடுகள் இருப்பினும் எவ்வித முன்னறிவிப்புமின்றி மேற்படி மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள இறுதி அங்கீகாரம் செயல் அலுவலர், ருத்ராவதி பேரூராட்சியால் இரத்து செள்ளறப்படும் மேலும் இம்மனைப்பிரிதவு தொடர்பாக ஏதேனும் நீதி மன்ற நடவடிக்கை எடுக்கப்படுமாளின் அது செல்லத்தக்கதல்ல . மேற்காண் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுககு உட்பட்டு மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

6/3/19

செயல் அலுவலர்
ருத்ராவதி பேரூராட்சி
திருப்பூர் மாவட்டம்.

6/3/19

இணைப்பு :
உத்தரவு மற்றும் வரைபடம் - 1 அசல்

பெறுதல்:
திரு.சா.சத்தியசீலன்
த/பெ கே.எம்.சாமிநாதன்
11, கோவை ரோடு
குண்டடம்

நகல்

1.) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் சேலம் மண்டலம், சேலம்அவர்களின் தகவலுக்காக.
2.) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலம், தாராபுரம் மேற்படி மனைப்பரிவில் அமைந்துள்ள மனைகளை விற்பனை செய்து கொள்ள அனுமதி வழங்கிட
3.) வட்டாசியர், வட்டாசியர் அலுவலகம், தாராபுரம், இம்மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பொது இடங்களின் பட்டா பெயர் மாறுதல் செய்வதற்காக.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate